பதற்காக ஒரு குறிப்பிட்ட ரூபாய் பிடித்து வந்தார்கள். இப்போது அடிப்படைச் சம்பளம் அதிகமாக இருப்பதால் இந்த விகிதாசாரத்தில் பிடிக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்க ஆலோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான் குறிப்பிட்ட விடையே கூட சற்று முற்பட்ட நிலையை விளக்கும் விடைதான். அண்மையில் ஏற்பட்ட புதிய நிலைமையைக் கூற வாய்ப்பு இல்லை. வாய்ப்பு இல்லாததற்குக் காரணம் அண்மையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு புதிய சம்பள விகிதம் வழங்க வேண்டுமென்று ஆலோசனை செய்து முடிவு செய்திருக்கின்றார். அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

கோவைக்கு குடிநீர் வழங்குதல்

*** 260 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மக்களின் குடிநீர் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு என்னென்ன திட்டங்கள் தற்போது அரசு பரிசிலனையில் உள்ளன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சிங்காநல்லூர், கோயம்புத்தூர், ஆகிய ஊர்களுக்கும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் நீர் வழங்கும் விரிவான நீர் வழங்கல் திட்டம், சிறுவாணி மேம்பாட்டுத் திட்டம், ஆனையாறு திட்டம் முதலிய மூன்று திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்தன.

1973-ம் ஆண்டு மே மாதம் ஆனையாறு திட்டத்திற்கு அரசினரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கேரள அரசுடன் சிறுவாணித் திட்டம் சம்பந்தமாக ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. சிறுவாணித் திட்டத்திற்காக கேரள அரசினருக்கு முதனிலைப் பணிகளுக்காக ரூ. 10 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. கேரள மாநிலப் பகுதியிலிருந்து அணைப் பகுதி வரை சாலைகள் போட ரூ. 15 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மொத்தமாக சற்றேறக்குறைய 10 கோடி ரூபாய் அளவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது

1973 நவம்பர் 21]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சிறுவாணி நீர் ஒப்பந்தம் எத்தனை ஆண்டுக் காலத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 99 ஆண்டுக் காலத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் முழு அளவில் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

திருப்பூருக்கு குடிநீர் வழங்கல்

***261 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேலும் ஓர் குழாயின் மூலம் மேட்டுப்பாளையத்திலிருந்து குடி தண்ணீரை திருப்பூர் நகருக்கும் கொண்டு வரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சியில் 2 லட்சம் மக்களுக்குத் தலைக்கு 115 லிட்டர் (25 காலன்கள்) விதம் தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நலமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : இங்கு கடந்த பல்லாண்டுக் காலமாகக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. திருப்பூரில் மக்கள் எண்ணிக்கை 1981-ம் ஆண்டு கணக்குப்படி 81,000 பேர் இருக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கிட்டதட்ட 1½ லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. அது தொழில் நகரமாகவும் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்லாண்டுக் காலமாகக் கோரிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். முதல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 1963-ம் ஆண்டு பல்லாண்டுக் காலமாக